இன்றன. அடுத்த தேர்தல் நடப்பதற்கு முன் நகரசபை வார்டு களைத் திட்டவட்டமாக நிர்ணயிப்பதற்கு அரசாங்கம் உத்தேசிக் குமா என்று அறிய விரும்புகிறேன்.

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: ஏற்கனவே இந்தத் தேர்தல் நடக்க இருந்ததால் ரீ டிஸ்ட்ரிப்யூஷன் ஆப் வார்ட்ஸ் செய்ய முடி யாத நிலைமை இருந்தது. அதோடு 1961-ல் சென்ஸஸ் நடை பெற்றதனுல் பிறகு பார்த்துக் கொள்ளலாம் என்று ஒத்திபோடப் பட்டது. இப்போதுள்ள நெருக்கடி நிலைமையை உத்தேசித்து ஒத்திவைக்கப்பட்டிருக்கிறது.

திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: தேர்தல் கமிஷன் இடைத் தேர்தல் கள் நடத்தலாம் என்று சொல்லியிருக்கும்போது, அரசாங்கம் இந்தத் தேர்தல்களையும் நடத்துவதற்கு உத்தேசம் உண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: தேர்தல் கமிஷன் இடைத் தேர்தலைப்பற்றித் தான் கூறுகிறது.

எக்ஸ்பிரஸ் பஸ்கள் (வருமானம்)

* 64 **கேள்வி.—திரு. முனு ஆதி:** கனம் கைத்தொழில் அமைச்சர் தயவு செய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) 1960, 1961 ஆண்டுகளில் நீண்ட தூர எக்ஸ்பிரஸ் பஸ்கள் மூலம் அரசாங்கத்துக்குக் கிடைத்த தொகை எவ்வளவு?

(இ) இவ்வாறு எக்ஸ்பிரஸ் பஸ்கள் விடுவதால் ஆன செலவு எவ்வளவு?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்:

(அ) & (இ)

வருடம்	வரவு	செலவு
1960	ரூ. 4,36,004.88	ரூ. 3,70,922.82 ந.பை.
1961	ரூ. 13,09,275.38	ரூ. 11,39,814.34 ந.பை.

திரு. ஆ. கு. சுப்பையா: கனம் அமைச்சர் அவர்கள் வருமா னத்தையும் செலவையும் சொல்லுகிறபோது லாபம் அதிகமாக வருகிறது என்று தெரிகிறது. ஆகவே அரசாங்கம் இன்னும் அதிகமான பஸ்களை விடுவதற்கு யோசிக்குமா?

கனம் திரு. ஆர். வெங்கட்டராமன்: படிப்படியாக நீண்ட தூர பஸ்களை அதிகமாக்க வேண்டுமென்பது சர்க்காரின் கொள்கை. இது நிதி வசதியைப் பொறுத்து செய்யப்படும்.

திரு. கரு. சீமைச்சாமி: சாதாரணமாக தனியார் துறையில் நடத்தப்படும் பஸ்களில் வரும் லாபத்தைவிட சர்க்காரால் நடத்தப்படும் பஸ்களில் வரும் லாபம் மிகக் குறைவு என்பது சர்க்காருக்குத் தெரியுமா?

TRUTH ALONE TRIUMPHS